1-1-1939 2-7-1939

மலாய்-10 சதம் பர்மா-0-1-6 இலங்கை 7 சதம்

TAMIL MANI REGD NO. M. 3384

# தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம் எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 4 ஓசை 34 | சென்னை—பிரமாதி௵ ஆனி௴ 18௳ ஞாயிற்றுக்கிழமை (2—7—39) | விலை ஒரு அணா

## தவிக்கும் தலைவர்கள்!

போலந்து தலைவர்
இக்னேசி மோஸிகி



பின்லந்து தலைவர்
கியோஸ்டி காலியோ



லிதுவேனியா தலைவர்
அன்டனஸ் ஸ்மடோனா

ஐரோப்பிய நெருக்கடியில் சிக்கி, இன்று தவித்துக்கொண்டிருக்கும் ஐந்து தேசத் தலைவர்கள். இவர்கள் பெரும்பாலும் ஹிட்லருக்கே பயப்படுகின்றனர். இந்தத் தேசங்கள்மீது ஹிட்லர் என்று பாய்கிறாரோ தெரியவில்லை. பரிதவிக்கும் இந்தச் சிறு தேசங்களைப் பாதுகாக்க வல்லரசுகளுக்கு ஆண்மை இல்லை. அந்நாடுகள் மழுப்பிக்கொண்டே போகின்றன. ஐரோப்பிய நெருக்கடி அதிகரித்து வருவதற்கு இதுவே காரணம்.



எஸ்தோனியா தலைவர்
கான்ஸ்டான்டின் பாட்ஸ்



லாட்வியா தலைவர்
கார்லிஸ் அல்மானிஸ்

சொற்பப் பிரதிகளே இருக்கின்றன *

* * உடனே முந்துங்கள்

"தமிழ்மணி" ஆசிரியர் எழுதிய

# சொக்கநாதன்

அல்லது

## ரங்கன் திருவிளையாடல்

காதல், சோகம், ஹாஸ்யம், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த முதல்தரமான துப்பறியும் நாவல்

விலை **12** அணா.

முன்பணமாக அனுப்பவும். வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இந்தியாவுக்கு தபால் செலவு உள்பட ரூ. **1-0-0**

பர்மா, மலாய் முதலிய அந்நிய நாடுகளுக்கு

தபால் செலவு உள்பட ரூ. **1-2-0**

## தமிழகம்

தமிழ்நாடு, பூர்வீக நாடு; தமிழ்நாடு அக்காலத்திலிருந்த நிலையும், தமிழ் மக்களின் மொழி, சமயம், நாகரீகம் முதலியவைகளைப் பற்றியும் இந்நூல் ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டு நாகரீகம் பிறநாடுகளுக்குச் சென்று தமிழர் பெருமையை வியாபகப் படுத்தியதையும் இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. சரித்திர ஆராய்ச்சியும் இந்நூலில் காணப்படுகிறது. ஒவ்வொரு தமிழரும் இந்நூலை வாசிக்க வேண்டியது அவசியம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 2-4-0 தபால் செலவு 0-6-0

## தமிழர் சரித்திரம்

கி. மு. 5000 வருடங்களுக்கு முன்னுலிருந்து தமிழரின் பூர்வீக வரலாறுகளை எடுத்துக் காட்டும் இந்நூல், மாணவர்களுக்குப் பெரிதும் உபயோகமானது.

## அந்தணர், "பார்ப்பனர் என்போர் தமிழ் மக்களே".

அந்தணர் பார்ப்பனர் என்போர் தமிழ்மக்களல்லர்; ஆரிய மக்களே என்னும் தப்பான கொள்கை தமிழ் நாட்டில் ஏற்பட்டதினுல், பல தலைதடுமாற்றங்கள் உண்டாயின. தென்னுட்டில் ஆரியக் கலப்பென்பது கொள்கை அளவில் ஏற்பட்டதேயன்றி, "இரத்தக் கலப்பினுல் ஏற்படவில்லை" என்பதை இந்நூல் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

புத்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 2 0 0 தபால் செலவு 0-6-0

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பரிபாடல் வசனம் | 1 | 0 | 0 | " | " | " |
| பத்துப் பாட்டு வசனம் | 1 | 0 | 0 | " | " | " |
| பதிற்றுப்பத்து வசனம் | 1 | 0 | 0 | " | " | " |
| சிலப்பதிகாரக் கதை | 1 | 8 | 0 | " | " | " |
| புறப் பொருள் விளக்கம் | 1 | 0 | 0 | " | " | " |
| நன்னெறி நீதிக் கதைகள் | 1 | 0 | 0 | " | " | " |
| அக நானூறு வசனம் | 1 | 0 | 0 | " | " | " |
| சிலப்பதிகார விளக்கம் | 1 | 8 | 0 | " | " | " |
| மூன்று பெண்மணிகள் | 0 | 6 | 0 | " | " | " |
| தமிழ் நாட்டு நவமணிகள் | 0 | 8 | 0 | " | " | " |
| மகளிர் ஒழுக்கம் | 0 | 6 | 0 | " | " | " |

எல்லா "தமிழ் மணி" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மானேஜர்,

**ரமணி ஸ்டோர்ஸ்,**

ஜி. டி. மதராஸ்.



## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

வீண் விளம்பரங்களிலும், பரிசுப் பண்டங்களிலும் மனதைச் செலுத்தி ஏமாறவேண்டாம்

நாள் முழுவதும் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை மட்டச் சரக்கில் செலவிட்டு மணமற்ற—ருசியற்ற-பலமற்ற-குணமற்ற போஜனம் தயாரித்து உண்டு போஜன சுகம், உடல் நலம், ஜீரண சக்தி இவற்றைக் கெடுத்து நோய்க்கிடங் கொடுத்து வீணே உழல்வதேன்?

பலராலும் புகழப்பட்டு தினமும் உபயோகித்து இன்புறும்

நிகரற்ற **A** மார்க்கு ஒன்றே மிகவும் சிறந்த

# பெருங்காயம்

இன்றே வாங்கி இன்புறுங்கள். எங்கும் கிடைக்கும்.

**வல்லபதாஸ் தேஜ்பால்,**

14, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.



மதராஸ் டி. சி. என். கோல்டன் மேடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய **கழுத்து செயின்கள்**




அசல் தங்க செயின்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல. கறுக்காது.

2௵ உத்தரவாதம் மிகவும் அழகாக இருக்கும்

செயின்கள் விலை விவரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெரிய சைஸ் | ஒத்த பேட்டை | 1-க்கு | ரூ. | 7 | 0 | 0 |
| ,, | ரெட்ட பேட்டை | ,, | ,, | 14 | 0 | 0 |
| ,, | மூன்று பேட்டை | ,, | ,, | 21 | 0 | 0 |
| ,, | நான்கு பேட்டை | ,, | ,, | 28 | 0 | 0 |
| பேபி சைஸ் (சின்னது) | | | | | | |
| ,, | ஒத்தபேட்டை | 1-க்கு | ரூ. | 5 | 0 | 0 |
| ,, | ரெட்டபேட்டை | ,, | ,, | 10 | 0 | 0 |

வி. பி. செலவு 1 பேட்டை முதல் 5 பேட்டை வரையில் 8 அணா.

குறிப்பு:—"தமிழ் மணி" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு 1 அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும். மேலும், எமது கேட்லாக் இனும்.

குறிப்பு:—சிலோன், பர்மாவுக்கு தபால்செலவு அணா 12. மலேயா நாட்டுக்கு ரூ. 2. மேற்கண்ட வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூரா கிரயமும் தபால் செலவும் ஆர்டருடன் அனுப்பவேண்டும்.

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,

280, வால்டாக்ஸ் ரோடு, பார்க்டவுன், மதராஸ்.



**G. கன்னையா கம்பெனி**

இரும்புப்பெட்டி வியாபாரம்
கவர்ன்மெண்டு
ரயில்வே, பாங்கு
கொவாபரேடிவ்சொஸைடி
வியாபாரிகளுக்கும், சப்ளையர்கள்

137, பிராட்வே, மதராஸ்

சொக்கநாதன்

*

தொடர் கதை

# மாய வெளிச்சம்!

தஞ்சை இளவரசி மோகனாவும், கமலமும் பழைய கதைகளைப் பேசிக்கொண்டே தஞ்சை நந்தவனத்திலுள்ள தாமரைத் தடாகத்துக்குச் சென்றார்கள். அங்கு சிறிதுநேரம் உட்கார்ந்திருந்தனர். பழைய எண்ணங்கள் வரவே, மோகனாவின் முகம் சஞ்சலமடைந்தது. இதைக் கண்ட கமலம், அவளை அழைத்துக் கொண்டு நந்தவனத்தின் தெற்கேயுள்ள சிறு பளிங்கு மண்டபத்துக்குச் சென்றாள். அங்கு சென்றதும், மோகனா மண்டபத்தின் படியில் உட்கார்ந்து கொண்டு ஆழ்ந்து சிந்திக்கலானாள். மோகனாவின் சிந்தனையைச் சிதைக்கக்கூடாதெனக் கருதி கமலம், சற்றுத் தூரத்தில் சென்று உட்கார்ந்தாள். அவளும் இனிமேல் நடக்க வேண்டிய விஷயங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கலானாள். ஆனால், கமலம் வேட்டை நாய்க்குச் சமமானவள். அவள் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தபோதிலும், அவள் கண்ணோட்டம் மட்டும் நந்தவனத்தின் நாலா பக்கமும் ஓடிக்கொண்டிருந்தது.

நந்தவனத்தின் சோலையில் தோட்ட வேலைக்காரர் குடிசைகளுண்டு. அங்கு அவள் திருஷ்டி விழுந்தது. வேலைக்காரர்கள் குடிசைகளிலிருந்து ஒரு யௌவனப் பெண் வந்தாள். அவள் வந்த சிறிது நேரத்தில் அவளைப் பின்தொடர்ந்து ஒரு பரம தடியன் வந்தான். யௌவன மாது ஒரு குடிசையினுள் நுழைந்தாள். அந்தப் பக்கமே அந்தத் தடியனுஞ் சென்று மறைந்தான். அவர்கள் மறைந்த சிறிது நேரத்தில் குடிசையிலிருந்து மகா கேவலமான நிலைமையிலுள்ள ஒரு கிழ உருவம் வந்தது. முன்னால் மறைந்த இருவரையும் அந்தக் கிழ உருவம் பின்தொடர்ந்தது. இதைக் கண்ட கமலம் திடுக்கிட்டளேயாயினும், அவளுக்கு இது பெரும் ஆச்சரியமாகவிருந்தது. மோகனா கமலத்துடனிருந்தது, அவளுக்குப் பெரிய முட்டுக்கட்டையாயிருந்தது. மோகனா இல்லையேல் அவள் கட்டாயம் அந்த உருவங்களைப் பின்தொடர்ந்து, அவைகளின் ரகசியங்களை அறிய முயற்சித்திருப்பாள். என்றாலும், மோகனா குடிசையில் நடக்கும் மாய ஜாலங்களை அறியக்கூடாதென நினைத்துக் கமலம், மோகனா அருகில் வந்து நின்றுகொண்டிருந்தாள். ஏதோ இயற்கையைக் கண்டு ஆனந்திப்பது போல் குடிசைகளைப் பார்த்துக் கொண்டே நின்றாள். குடிசைகளுக்குள் மறைந்த உருவங்கள் மீண்டும் வெளியில் வரக்கூடுமென எண்ணி, சிறிது நேரம் அந்தப் பக்கமே கவனித்துக்கொண்டிருந்தாள். ஆனால், அவள் எண்ணியபடி, அந்த உருவங்கள் வெளியில் வரக் காணவில்லை. வந்தாலும் அதனால், நன்மையே ஒழிய தீமையல்ல. ஏனெனில், மோகனா அங்கிருந்தது கமலத்துக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, மோகனாவை அங்கிருந்து கடத்திக் கொண்டு போகக் கமலம் எண்ணினாள்.

"அக்கா, நாம் வந்து நேரமாகிவிட்டதென்று நினைக்கிறேன்... பொழுதும் புலருந் தருணம்..."

"ஏன், கமலம்? போகலாமென்று என்னைக் கூப்பிட்டால் நான் உன்னைப் பின்தொடர்ந்து வர மாட்டேனா?......அதைவிட்டு என்னமெல்லாமோ வர்ணிக்கிறாயே!"

"இல்லை...நேரமாகிவிட்டதென்றே கூறினேன்......அக்கா, ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறீர்கள். அத்தான் தியானம் லேசானதா? அதில் எவ்வளவோ இன்பமிருக்கக் கூடும்!...மனதிருப்தி. .இன்னம்..."

"ஆகா!...அப்படியா? கமலம், இன்னமும் என்ன சொல் பார்ப்போம்..." என்று புன்னகையுடன் கேட்டாள் மோகனா.

"அது எனக்கு என்ன தெரியும்? அக்காளுக்குத்தான் நன்றாகத் தெரியும்!..."

"அப்படியானால்...இன்னமும் என்று ஏன் கூறினாய்?..."

"தெரியாமல்தான்.....இன்னமும் என்னவென்று அக்கா வாயிலிருந்து வராதாவென்று அறியத்தான் அப்படிச் சொன்னேன்..."

"கமலம், நீ ஒரு கதை கேள்விப் பட்டிருப்பாயா?.'

"அது என்ன கதை...அக்கா?..."

"நான் அதைச் சொன்னால் நீ கோபப்பட்டுக்கொள்ளக் கூடாது... அது அவ்வித கதை..."

"அப்படியா? அந்தக் கதை என்ன?......எனக்குக் கோபம் வராது...அதிலும் நான் கூடவா கோபப் பட்டுக்கொள்ளுவது?..."

"அப்படியானால் சரி, சொல்லுகிறேன்...தான் திருடி பிறரை நம்ப மாட்டாளாம், என்ற கதை கேள்விப் பட்டிருக்கிறாயா?"

"அந்தக் கதையா?......ஆமாம் கேள்விப்பட்டிருக்கிறேன்.....அக்கா ...அந்தக் கதை எனக்கு எப்படிப் பொருத்தமோ, அதேபோல் உங்களுக்கும் அது பொருத்தமல்லவா? என்று, கமலம் சிரித்துக்கொண்டே சொன்னாள். மோகனாவுக்கும் சிரிப்பு.

"பார்,...விஷப் பாம்புக் குட்டிக் கமலம்!...அந்தக் கதையை எப்படித் திருப்பிவிட்டாள்! கமலம், உனக்கு இந்தப் பட்டங்கள் கட்டினாளே ரஞ்சிதம், அவள் வாயில் சர்க்கரை போடவேண்டும்!"

"அக்கா சர்க்கரை இல்லை. ஈர மண்ணைப் போடவேண்டும்! அந்த ஈர மண்ணைப் போடவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. நானும் மண்ணைத் தயார் செய்துகொண்டு தான் வருகிறேன்!"

"அது என்ன 'ஈர மண்? கமலம், அதை நான் அறியக்கூடாதா?..."

"இல்லை அக்கா, அவள் என்னமெல்லாமோ நினைத்துக்கொண்டிருக்கிறாள். அவள் எண்ணம் ஈடேற விடாமல் தடுக்கப் போகிறேன்..."

"அது உன்னால் முடியுமா?..."

"ஏன் முடியாது?...அதையும் பார்ப்போம்...அது போகட்டும், அக்கா நாம் புறப்படுவோமா?"

"ஆம், புறப்பட்டுப் போகலாம். ஒருவேளை பாட்டி வந்திருப்பாளா?..."

"ஓகோ, பாட்டியா!...அத்தானிடமிருந்து ஏதேனும் செய்தி வந்திருக்கலாமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?..."

"கமலம், அந்த எண்ணமே எனக்குக் கிடையாது. நீதான் என்னமெல்லாமோ கூறுகிறாய்..."

"நானா கூறுகிறேன்...சரி அப்படியே இருக்கட்டும்...நீங்கள்தானே சற்றுமுன் சொன்னீர்கள். தான் திருடி பிறரை நம்பமாட்டாள் என்று..."

"அது கோபமா?...கமலம்...நான்தான் ஏற்கனவே சொன்னேனே... அது பொல்லாத கதையென்று... நீதானே கூறும்படி சொன்னாய்..."

"எனக்குக் கோபமில்லை...ஆனால், எந்தவிதத்தில் நான் திருடியென்று தான் யோசித்துக் கொண்டிருந்தேன்...."

"அப்படியானால்...நான் மட்டும் எப்படித் திருடி?"

"உங்களைத் திருடியென்று சொன்னேனா?...உங்கள் வாயிலிருந்தே வருகிறது!...அப்படியானால்..."

"கமலம் உன்னோடு வாயாட என்னால் முடியாது...சரி போகலாம் வா" என்று இருவரும் புறப்பட்டார்கள்.

மோகனாவுடன் கமலம் இவ்வளவு தூரம் வாதாடிக் கொண்டு, தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தாலும், அவளுடைய கண்கள் மட்டும் குடிசைகள் மீதே இருந்தன. குடிசைக்குள் மறைந்த உருவங்கள் எதுவும் வெளிவரவில்லை. ஆகவே, கமலம், மோகனாவுடன் அரண்மனையை நோக்கி நடந்தாள். அரண்மனை சென்றதும் மோகனா களைத்துப்போய் ஒரு சோபாமீது சாய்ந்தாள். மற்றொரு சோபாமீது கமலம் சாய்ந்துகொண்டாள். இருவரும் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பாட்டி வராததைப்பற்றி மோகனா குறிப்பிட்டாள். சீக்கிரம் பாட்டி வந்துவிடக்கூடுமெனக் கமலம், மோகனாவுக்குச்

(அடுத்த பக்கம் பார்க்க)


# இந்தியன் ரிலீப் பாங்க், லிமிடெட்

## INDIAN RELIEF BANK, Ltd.,

(பிரிட்டிஷ் இந்தியாவில் இணைக்கப்பட்டது)

ரெஜிஸ்ட்டர்டு ஆபீஸ்: —சேன்தோம், மைலாப்பூர், மதராஸ்.

கிளை ஸ்தானங்கள்:—கிடங்குத் தெரு, மதராஸ்; கோல்லம், தென்காசி.

ஏழைகள் பணத்தைச் சிறுகச் சிறுக க்ஷேமித்து வைப்பதற்கும், ஏழைக் கைம் பெண்களின் பணத்துக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்கும் "இந்தியன் ரிலீப் பாங்கி"தான் ஏற்ற இடம். ஏன்? இந்த பாங்கை நடத்துபவர்கள் சிக்கனமாகவும், திறமையாகவும் நடத்தி வருகிறார்கள். ஏழைகளுக்கும், வர்த்தகர்களுக்கும் கூடியவரையில் கஷ்ட நிவாரணம் அளிப்பதையே ஒரே சத்தியமான நோக்கத்துடன் இந்த பாங்கை நடத்தி வருகின்றனர். உங்கள் பணத்துக்குப் பங்கமில்லை; உங்கள் கஷ்டங்களுக்கு நிவாரணம் கிடைக்கும் நிரந்தரமான டிபாஸிட் தொகைகளுக்கு நியாயமான வட்டி கிடைக்கும்.

நிரந்தரமான டிபாஸிட் தொகைகளுக்கு:—6, 12, 18, 24 மாதங்களுக்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு முறையே 4, 5, 5½, 6 வீதம் வட்டியுண்டு.

நீங்கள் இரத்தஞ் சிந்தப் பாடுபட்டுழைக்கும் பணம் விரையமாகாமல் காப்பாற்றுவதற்கு இந்தப் பாங்கியின உதவியை நாடுங்கள்.

வி. மரிய பாக்கியம்
மானேஜர்.

பி. கே. தாமஸ் பி. எ., பி. எல்., பி. கம்
மானேஜிங் டைரக்டர்.

# மாய வெளிச்சம்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

சமாதானம் கூறினாள். ஆனால், கமலத்தின் மனதில் மட்டும் சாந்தமில்லை. வெளியில் சென்ற பாட்டி என்ன கதியானாளோ வென்று பயந்துகொண்டிருந்தாள். பாட்டியின் வரவையும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். எனினும், மோகனாவுக்குச் சந்தேகம் ஏற்படாமல் தடுக்க இடையிடையே தமாஷாகப் பேசினாள்.

மோகனாவும், கமலமும் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், வேலைக்காரர் குடிசைக்குள் நுழைந்த இரு உருவங்களும், சிறிது நேரம் ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தன. அது பேசி முடிந்ததும், முதன் முதலில் யௌவன உருவமே குடிசையிலிருந்து புறப்பட்டது. நேரடியாக நந்தவனத்தினுள் சென்றது. அங்கிருந்து தாமரைத் தடாகத்துக்குச்சென்று, அங்கு சிறிது நேரம் உட்கார்ந்து ஆர; அமர யோசித்தது· அந்த உருவரும் அதின் சிந்தனையில் எவ்வளவு தூரம் ஆழ்ந்திருந்ததென்றால், அதின் சமீபமாக ம்றைந்து, மறைந்து சென்ற மற்றொரு உருவத்தைக்கூட அது கவனிக்கவில்லை. சிறிது நேரத்தில் அது அங்கிருந்து புறப்பட்டது.

இதற்குள் பொழுதும் புலர்ந்தது. நந்தவனத்திலிருந்து அரண்மனைக்குள் செல்லும் வாசல் பக்கம் அந்த உருவம் வந்து நின்றுகொண்டு சுற்று முற்றும் பார்த்தது. கதவண்டை சென்று உற்றுக் கேட்டது; ஒரு அரவமும் கேட்கவில்லை. ஆகவே, மீண்டும் நந்தவனத்தில் சென்று, பல இடங்களை உற்றுக் கவனித்துக் கொண்டே சென்றது. தரையைக் கூர்மையாகக் கவனித்தது. ஓரிடத்தில் நின்று கொண்டு, காலால் தரையைத் தட்டிப் பார்த்தது. அதற்கு ஒரு சந்தேகம் பிறந்தது; உடனே தரையில் உட்கார்ந்து கொண்டு, பூமியை மெதுவாகத் தோண்டிப் பார்த்தது. பூமியை தோண்டின வேகத்தில் அது அருகில் வந்த மற்றொரு உருவத்தைக் கவனிக்கவில்லை. அந்த உருவம் அருகில் திடீரென வந்ததும், பூமியைத் தோண்டிக் கொண்டிருந்த உருவம் திடுக்கிட்டு எழுந்தது. அதின் கைகால்கள் நடுங்கின.

"என்ன!...இப்படித் தானா பேய் போல் வருவது?"

"அங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்?...நான் சில விஷயங்களை உன்னிடம் கூற மறந்து போனேன்; அதற்காகத்தான் அவசரமாக ஓடிவந்தேன்..."

"என்ன விசேஷம்?......இங்கு வரும்படிதான் நான் சொல்லியிருந்தேனே? அப்பொழுது என்னிடம் அந்த விசேஷங்களைச் சொல்லியிருக்கக் கூடாதா?..."

"மெய்தான்...என்னமோ உன்னைப் பிரிந்திருக்க என்னால் சகிக்க முடியவில்லை. மீண்டும் உன்னிடம் ஓடிவந்தேன்...நான் கேட்டது... இப்பொழுதாவது..." என்று பல்லைக் காட்டிப் பேசினான்.

"உங்களுக்கென்ன பைத்தியமா? இது என்ன இடமென்பது தெரியாதா?...உங்களை நான் இரவில் எதற்காக வரச்சொன்னேன் என்பது தெரியவில்லையா?..." என்று, அந்த உருவம் அதிகார தோரணையில் சொன்னது.

"அப்படியா, நான் ஒரு மடையன்!...எனக்கு அது விளங்கவில்லை. அது போகட்டும், இன்றிரவு கட்டாயம் வருவேன். கட்டாயம் குறிப்பிட்ட நேரத்தில் இங்கு வந்திருப்பேன்...தவறவேமாட்டேன்"

"சரி போய் வாருங்கள்...சீக்கிரம் போய் வாருங்கள்...யாரும் வரக் கூடும்..."

"இதோ போய்விடுகிறேன்...அந்தத் தரையை ஏன் தோண்டிக் கொண்டிருக்கிறாய்...?"

"நான் உங்களிடம் கூறியது ஞாபகமில்லையா? அதை அறியவே தோண்டிப் பார்க்கிறேன்..."

"அதற்கு இப்பொழுது அவசியம் என்ன வந்தது?...இரவில் நாம் இருவருமாக அதை நன்றாகப் பரிசோதித்துப் பார்க்கலாமே..."

"மெய்தான்...நந்தவனத்தில் நான் தனிமையாக இருக்கிறேன்...ஆதலால், அதைப் பரீட்சித்துப் பார்க்க எண்ணினேன்...போய் வாருங்கள். நேரமாகிறது...இரவு மறந்துவிட வேண்டாம்..."

"கட்டாயம் வருவேன். நான் மறப்பதாவது!...மறக்கத்தான் முடியுமா? என் ஜீவிய காலத்தில் நான் இட்சித்த ஒரு அபூர்வ பொருள் என் கைக்குக் கிடைக்கப்போவதை நான் வேண்டாமெனத் தள்ளுவேனா?...ஆசா! கட்டாயம் வருவேன்...மறந்துவிடவே மாட்டேன்" என்று சொல்லிக்கொண்டே அந்த உருவம் அங்கிருந்து சென்றது.

தோட்டத்திலிருந்த மற்ற உருவம் அங்கிருந்து வேறு இடத்துக்குச் சென்றது. செல்லும் வழிகளெல்லாம், பூமியைக் காலால் தட்டிப்பார்த்துக்கொண்டே சென்றது. அதன் புத்திக்கு ஒன்றும் தட்டுப்படவில்லை. சிறிதுநேரம் அங்குமிங்கும் உலாவிக்கொண்டே நந்தவனத்திலுள்ள பழைய மண்டபத்தை நோக்கி நடந்தது.

அந்த மண்டபத்தில் பேய் குடிகொண்டிருப்பதாக ஒரு வதந்தி இருந்துவந்தது வாசகர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கலாம். அதனால், இராக்காலங்களில் யாருமே அந்தப் பக்கம் போவது கிடையாது. என்றாலும், அந்த உருவம் துணிந்து அங்கு சென்றது. சிறிதுநேரம் படிகளில் நின்றுகொண்டு, சுற்றுமுற்றும் பார்த்தது. மண்டபத்தினுள் செல்ல அதற்குத் தைரியமில்லை; ஒவ்வொரு படியாக நின்று, ஆலோசித்துக் கொண்டே சென்றது. கடைசிப் படி ஏறியதும், மண்டபத்தினுள் கவனித்தது. அங்கு ஒரே இருள். என்றாலும், அந்த உருவம் ஒருபடி இறங்கியதுதான் தாமதம், அது கால் சருக்கிப் பொத்தென்று கீழே விழுந்தது. அதே சமயத்தில் அங்கு பயங்கரமான சப்தமொன்று கேட்டது. திடீரென ஒரு வெளிச்சமும் தோன்றிச் சட்டென மறைந்தது! கீழே விழுந்த உருவம் பயந்து! நடுநடுங்கி, "ஆ ஐயோ!! வெனக் கதறிக் கொண்டு ஓட்டமெடுத்தது. நேரடியாக அரண்மனைக்கு ஓடி வந்தது. ஓடி வந்த வேகத்தில் ஒரு கல் தட்டித் தடாரென்று விழுந்தது!

(தொடரும்)

சர்ச்லைட் கட்டிங்டைமன்டஸ் வர்ஜீனியாமலைப்பிரதேசங்களில்உற்பத்தியாகி சிறந்த மின்சார சாஸ்திரிகளின் ஆராய்ச்சியால் கண்டு பிடிக்கப்பட்டு அசல் வைரங்களுக்கு இணையாக விளங்குவது

சர்ச்லைட் வைரங்கள்

S. தீன்சேட்
94, தங்கசாலை தெரு
சௌகார்பேட்டை
ஜி. டி. மதராஸ்.

தோடு சைஸ் கமலம் 1க்கு 0-8-0 கடுக்கன் சைஸ் கமலம் 1க்கு 0-7-0 பேசர் சைஸ் கமலம் 1க்கு 0-6-0

# கர்ப்பச் சஞ்சீவி எண்ணெய்

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள், உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல் எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலம்கூட தூக்க முடியாத பலயீனம், சூலக ஜன்னி முதலிய வியாதிகளை யெல்லாம் தீர்த்து கர்ப்பபை சுத்திகரிக்கப்பட்டு, கர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். கர்ப்பம் தரிக்க 6 வித மலடுதீரும். கர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளை கூட்டுடன் வெளியில் அகற்றிவிடும். திடகாத்திரமும் பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

நபருக்கு 3 புட்டி வேண்டும். இந்த பேப்பரைக் குறித்து எழுதவும்.

1 புட்டி ரூ. 2. 3 புட்டி ரூ. 5. செலவு வேறு.

குணம் இல்லாவிடில் ரூ. 5. வாபஸ்

**R. M. K. சிவசுப்ரமண்யம்**

சித்த வைத்தியசாலை பழனி. S. I.

பிராஞ்சு:—16, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.

விலை ரூபா 1-0-0

மற்றெல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.


"தமிழ் மணி"
28-பக்கங்கள் விலை அ. 1.
வருட சந்தா ரூ. 4.
தனிப்பிரதி:-மலாய் 10 சதம்.
பர்மா 0-1-6, இலங்கை 7 சதம்

# -: இவர்கள் யார்? :-



போலந்து முதன் மந்திரி
ஜெனரல் ஸ்கலட் கோவ்ஸ்கி.

இன்று ஐரோப்பிய நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் சிறு தேசங்களில் முக்கியமானவை லிதுவேனியா, லாட்வியா, எஸ்தோனியா, பின்லந்து, ருமேனியா, யுகோஸ்லாவியா, கிரீஸ், ஸ்வீடன், நார்வே, டென்மார்க், ஸ்விட்சர்லந்து, முதலிய சிறு நாடுகளேயாகும். இவற்றுள், ஸ்வீடன், டென்மார்க், பெல்ஜியம், ஹாலந்து, ஸ்விட்சர்லந்து முதலிய நாடுகளைப் பற்றிச் சென்ற வாரம் நண்பர்கள் படித்திருக்கலாம். இந்த ஐரோப்பிய நெருக்கடியால் தவிக்கும் குறிப்பிடத்தக்க தேசங்கள் லிதுவேனியா, லாட்வியா, எஸ்தோனியா, பின்லந்து, போலந்து முதலிவை. இவை மிகச் சிறிய தேசங்களாக இருந்தபோதிலும், அவை சுதந்திரமான நாடுகள். சென்ற மகா யுத்தத்துக்குப் பின்தான் அவை சுதந்திரமடைந்தன. அந்த சுதந்திரத்தை நசுக்க வல்லரசுகள் முனைந்திருக்கின்றன. அந்த நாடுகள் எதேச்சாதிகார மன்னர்களின் ஆட்சியில் இல்லை; பூர்ண சுதந்திரம் பெற்ற குடியரசு நாடுகள். அந்தக் குடியரசுக்கு இன்று நாஜியரே பரம விரோதிகளாக இருக்கின்றனர். அவைகளுக்கு இன்று ஹிட்லர்தான் எமன்!

## ஹிட்லர் தந்திரம்!

அந்தக் குடியரசு நாடுகளுக்கு ஹிட்லர் எமனாக வரவேண்டிய அவசியம் என்ன வந்தது? ஹிட்லர் அவருடைய பேராசையை, நாடு பிடிக்கும் மண்ணாசையைப் பூர்த்தி செய்துகொள்ளவே இந்தச் சிறு தேசங்களின் சுதந்திரத்தை நசுக்கத் தீர்மானித்திருக்கிறார். ஐரோப்பாவை ஜெயிக்க வேண்டுமானால், அல்லது, ஐரோப்பாவில் ஹிட்லரின் ஆதிக்கமோ, அதிகாரமோ நிலைக்கவேண்டுமேயானால், ஹிட்லர் இந்தச் சிறு நாடுகளைப் பலி கொண்டேயாகவேண்டும். சிறு நாடுகளாகிய ஆஸ்திரியா, ஜெக்கோஸ்லோவோகியாவின் சுதந்திரத்துக்கு ஏற்கனவே உலை வைத்துவிட்டார். அதனால், மத்திய ஐரோப்பாவில் ஹிட்லருக்கு ஒருவித ஆதிக்கம் ஏற்பட்டிருக்கிறது. ருமேனியா, யுகோஸ்லாவியா, ஹங்கேரி பல்கேரியா, முதலிய சில சிறு நாடுகளிருக்கின்றன. அந்த நாடுகளின் சுதந்திரத்திலும், அவர் சீக்கிரம் கை வைத்தே தீருவார். ஆனால், அவருடைய ஆட்சிக்கு, அதாவது, ஜெர்மக்கு இணையான வல்லரசுகளாகிய பிரிட்டன், பிரான்ஸ், ரஷியா போன்ற தேசங்களுடன் ஹிட்லர் போட்டி போட்டு, அவருடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமேயானால், அவருக்குப் பால்டிக் கடலில் பூர்ண ஆதிக்கம் அவசியம். ஜெர்மனி இன்று அந்த நிலைமையில்தானிருக்கிறது. பால்டிக் சமுத்திரத்தின் ஆட்சி அவர் கைக்கு வந்தாலொழிய, அவர் ஒரு பலம் பொருந்திய கடற்படையை ஏற்படுத்தமுடியாது. ரஷியாவையோ, பிரிட்டனையோ, அல்லது பிரான்சையே அவர் பயமுறுத்தமுடியாது. அதற்காகத்தான் அவர் பால்டிக் சமுத்திரக் கரையோரமுள்ள சிறு தேசங்களின் சுதந்திரத்தைப் பறித்து, அந்த நாடுகளைக் குட்டிச் சுவராக்க எண்ணியிருக்கிறார். அதற்காகவே, அவர் டான்ஜிக்மீது பாயத் தயாராகிக்கொண்டு வருகிறார். டான்ஜிக்மீது பாய்ந்தால், போலந்து கண்டிப்பாக அவரை எதிர்க்கும். போலந்துக்கு அருகில் ஹிட்லர் ஏராளமான ஜெர்மன் துருப்புகளைக் கொண்டு போய் வைத்திருக்கிறார். டான்ஜிக் மீது பாய்ந்து, அதைக் கைப்பற்றிய பின், இதர சிறு தேசங்களுக்கு உலை வைத்தே தீருவார். கடைசியில் அது போலந்துக்கும் வினையாக வந்து முடியும். போலந்து, லாட்வியா, லிதுவேனியா, பின்லந்து முதலிய சிறு தேசங்களைக் காப்பாற்ற வல்லரசுகள் இன்றே முயற்சித்தாலொழிய, அந்த நாடுகளின் கதி அதோகதிதான்!

## சுதந்திரம் கொள்ளை! :-
## -: கொள்ளி வைப்பது யார்?

ஐரோப்பாவையே சுருட்டி, மடக்கி வாயில் போட்டுக் கொள்ள நினைக்கும் ஹிட்லர், பால்டிக் கடலில் ஆதிக்கஞ்செய்ய நினைக்கிறார். அதற்காக டான்ஜிக்மீது படை எடுக்கப் படை திரட்டி இருக்கிறார். டான்ஜிக்மீது பாய்ந்து, அதைக் கொள்ளையடிப்பதோடு அவர் நின்று விடமாட்டார். பால்டிக் கடலோரத்திலுள்ள இதர சிறு தேசங்களின் சுதந்திரத்தையும் கொள்ளை கொண்டு, அந்தச் சிறு தேசங்களுக்கு அவர் கொள்ளி வைத்து விடுவாரென்பது திண்ணம்.



போலந்து அந்நியநாட்டு மந்திரி
கர்னல் பேக்.



போலந்தில் இன்று சர்வாதிகாரி
போன்று விளங்கும்
மார்ஷல் ஸ்மிதிலி-ரீட்ஜ்.

## லிதுவேனியா

பால்டிக் கடல் ஓரத்திலுள்ள லுதுவேனியாவை எடுத்துக்கொள்ளுவோம். இது ஒரு சிறு தேசம். இதின் ஒரு பாகமாகிய மெமல் பிரதேசத்தை ஹிட்லர் ஏற்கனவே கைப்பற்றிக்கொண்டார். இறுதியில், லிதுவேனியாவும் ஜெர்மன் வயிற்றுக்குள் போய்விடுமென்பதில் சந்தேகமில்லை. லிதுவேனியா ஒரு காலத்தில், அதாவது மகாயுத்தத்துக்குமுன் ரஷிய மாகாணங்களில் ஒன்றாக இருந்தது. யுத்தகாலத்தில் லிதுவேனியாவின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர் இன்று அதின் தலைவராக இருக்கும் அண்டனாஸ் ஸ்மட்டோனா. லிதுவேனியாவின் சுதந்திரத்தை 1919ம் வருடம் ஏற்படுத்தியவர் இவரே. அந்த சுதந்திரத்தை வெகு பக்குவமாகப் பாதுகாத்து வந்தார். இன்று, அவர் கண் முன்பாகவே மெமலை ஜெர்மனி கைப்பற்றியது. இனிமேல் லிதுவேனியா உயிருடன் தப்பிப் பிழைக்குமோ, என்னமோ சந்தேகந்தான்! டான்ஜிக் ஜெர்மனி கைக்குப்போகுமேயானால், லிதுவேனியாவையும், அதைச் சார்ந்துள்ள பால்டிக் பிரதேசங்களும் அதே கதிதானடையும். இந்தச் சிறு தேசங்கள் ஜெர்மனி கைக்குப் போகுமேயானால், ரஷியாவுக்கு ஆபத்து. அதனால்தான் ரஷியா, இந்தப் பால்டிக் பிரதேசங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும்படி பிரிட்டனை வற்புறுத்தி வருகிறது.




பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் எப்பொழுதும், ஹிட்லர், முஸோலினி கனவுதான். யுத்தப் பீதியே இதற்குக் காரணம்.

## லாட்வியா

லிதுவேனியாவைப்போல் ரஷிய பிரதேசங்களில் ஒன்றாக இருந்தது லாட்வியா; இதன் சுதந்திரத்திற்காகப் போராடி வந்தவர் லாட்வியா தலைவராக இருக்கும் கார்லிஸ அல்மானிஸ். இவரே லாட்வியாவின் சர்வாதிகாரி என்று சொல்லாம். இவர் ஒரு சாதாரண ஏழை விவசாயின் குமாரர். இவருடைய சிறு வயதில் ஒரு பால் பண்ணையில் வேலை பார்த்து வந்தார். கடைசியாக இவரே ஒரு பால் பண்ணை வைத்து நடத்தினார். இவர்

(அடுத்த பக்கம் பார்க்க)

SUN BRAND CIGARS ★ REGISTERED TRADE MARK
உயர்ந்த குணம், நிறைந்த மணம், போதிய காரம் எல்லாம் ஒருங்கே அமைந்துள்ளது
சூரியன் மார்க்கு சுருட்டுகள்
தி. வி. தம்புசாமி பிள்ளை அண்டு கம்பெனி, பாலக்கரை, திருச்சினப்பள்ளி. 3-70 பிராட்வே, மதராஸ்.

# இவர்கள் யார்?

(முன் பக்கத் தொடர்ச்சி)

1877 ம் வருடம் பிறந்தார். 1905ம் வருடம் வரையில் இவர் அரசியலில் தலையிடவே இல்லை. 1905ம் வருடம் லாட்வியாவில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது. அதில் அல்மானிஸ் தீவிரமாக இருந்தார். ஆதலால், அல்மானிஸை ரஷிய சர்க்கார் கைது செய்தனர். சில வருடங்களில் அவரை விடுதலை செய்தனர். அல்மானிஸ் முதலில் ஜெர்மனிக்குச் சென்றார்; அதன்பின் அமெரிக்காவுக்கு ஓடினார். 1913 ம் வருடம் ரஷிய சர்க்கார் புரட்சி கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளித்தனர். அல்மானிஸ் மீண்டும் லாட்வியாவுக்கு வந்தார். ரஷிய சர்க்கார் இவருக்குக் கவர்னர் உத்தியோகம் கொடுத்தார்கள். என்றாலும், அல்மானிஸ் லாட்வியாவின் சுதந்திரத்தை மறக்கவில்லை. 1918ம் வருடம் மீண்டும் லாட்வியா சுதந்திரக் கிளர்ச்சியைத் தீவிரமாக நடத்தினார். அதே வருடத்தில் சுதந்திரத்தை நிலை நாட்டினர்; அல்மானிஸே அதின் தலைவரானார். இன்றளவும் தலைவராக இருக்கிறார். லாட்வியாவின் சுதந்திரத்தை நசுக்கி, அதின் மூலம் ரஷியாவைப் பயமுறுத்த ஹிட்லர் நினைக்கிறார். அவர் எண்ணத்துக்கும் பேராசைக்கும், லாட்வியா என்று பலியாகிறதோ சொல்ல முடியாது.

## எஸ்தோனியா

லாட்வியாவுக்கு அடுத்தது எஸ்தோனியா. இதுவும் ரஷியாவின் ஒரு பாகந்தான்; இதுவும் மகா யுத்த காலத்தில்தான் சுதந்திரமடைந்தது. இதன் சுதந்திரம்துக்குக் காரணகர்த்தராக இருந்தவர் கான்ஸ் டான்டின் பாட்ஸ். இவர் ஒரு வக்கீல். அக்காலத்தில் எஸ்தோனியா ரஷிய ஆட்சியிலிருந்தது. ஆனால், அங்கு ஏராளமான ஜெர்மன் முதலாளிகளிருந்தனர். இதனால் எஸ்தோனியா, ஜெர்மனியிடமும் ரஷியாவிடமும் அவதிப்பட நேர்ந்தது. பாட்ஸ், ஜெர்மன் முதலாளிகளேயும், ரஷிய சர்க்காரையும் எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. 1905ம் வருடம் ஏற்பட்ட ரஷிய புரட்சியில் இவர் தீவிர பங்கு எடுத்துக்கொண்டார் ரஷிய சர்க்கார் இவரைக் கைது செய்து இவருக்கு மரண தண்டனை விதித்தார்கள். இவர் எப்படியோ தப்பித்துக்கொண்டு வெளி தேசங்களுக்குச் சென்றார். யுத்தகாலத்தில் மீண்டும் அவர் தாய் நாட்டுக்குத் திரும்பினார். மீண்டும் புரட்சி இயக்கத்தைத் தீவிரமாக நடத்தினார் அவருக்கு ஒரு ராணுவத்தை ஏற்படுத்திக்கொண்டு ரஷிய போல்ஷவிக்கை எதிர்த்தார். இவருக்குப் பிரிட்டனும், பிரான்சும் அதிக உதவியளித்தன. போல்ஷவிக்கரை வெருட்டிவிட்டு எஸ்தோனியர் சுதந்திரத்தை நிலை நாட்டினார். எஸ்தோனியா சுதந்திரமடைந்த சில தினங்களில், ஜெர்மன் முதலாளிகள் தகராறு செய்து எஸ்தோனியா சுதந்திரத்தை நசுக்கி அதைஜெர்மன் ஆதிக்கத்துக்குக் கொண்டு வந்தார்கள். பாட்ஸ் சிறையில் வைக்கப்பட்டார். யுத்த முடிவில் ஜெர்மன் ஏகாதிபத்தியம் ஒழிந்ததும், பாட்ஸ் மீண்டும் சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரமாக நடத்தி, எஸ்தோனியாவிலுள்ள ஜெர்மன் பணக்காரரை வெருட்டியடித்தார். எஸ்தோனியா பூர்ண சுதந்திரமடைந்தது. இன்று வரையில் அவரே அதற்குத் தலைவராக இருக்கிறார். ஜெர்மன் ஆதிக்கத்துக்குள்ளிருந்த எஸ்தோனியாவை மீண்டும் கைப்பற்ற ஹிட்லர் நினைக்கிறார். ரஷியா அதைக் கைப்பற்ற நினைக்காது போயினும், அதற்கு ஆபத்து வராமல் தடுக்க, எஸ்தோனியாவுக்குப் பாதுகாப்பு அளிக்கப் பிரிட்டனை வற்புறுத்துகிறது. ஆனால் லாட்வியா, எஸ்தோனியா போன்ற நாடுகளோ ரஷியா பாதுகாப்பு வேண்டாமெனச் சொல்லுகின்றன. ரஷியாவால் அந்த நாடுகளின் சுதந்திரத்துக்கு ஆபத்து வரக்கூடுமென அவை பயப்படுகின்றன. ஆனால், ரஷியாவைவிட ஹிட்லர் பொல்லாதவர்; கொடியவர்; ஏகாதிபத்திய ஆவல் கொண்டவரென்பதை அந்தச் சிறு நாடுகள் அறியவில்லைபோலும்! லிதுவேனியா, லாட்வியா, எஸ்தோனியா, பின்லந்து போன்ற சிறு நாடுகள் ஹிட்லரை நம்புமேயானால், அரசனை நம்பி புருஷனை இழந்த கதிக்கே அவை வந்து சேருமென்பதில் சந்தேகமில்லை.

## பின்லந்து

பின்லந்தும் ரஷியாவின் ஒரு பாகந்தான். ஆனால் பின்லந்து, லாட்வியா, லிதுவேனியா முதலிய சிறு தேசங்களைவிடக் கொஞ்சம் பெரியது. சுமார் 35 லக்ஷம் ஜனத்தொகை கொண்டது. அங்கு பெரும்பாலும் விவசாயிகளே. விவசாயமே முக்கிய தொழில். பின்லந்தும் மகா யுத்தகாலத்தில்தான் சுதந்திரமடைந்தது. இதன் சுதந்திரத்துக்கு முக்கிய காரணமாயிருந்தவர் இன்று அதின் தலைவராக இருக்கும் கியோஸ்டி கலியோ என்பார். இவருக்கு 66 வயதாகிறது; 1908ம் வருடம், இவர் ஒரு விவசாயிகள் கட்சியை ஆரம்பித்தார். இன்று அதுவே பின்லந்தில் முக்கியமான கட்சியாக இருக்கிறது. அந்தக் கட்சியே இன்று ஆதிக்கத்திலுமிருக்கிறது. கலியோ ரொம்ப நல்லவர்; எளிய வாழ்க்கையுடையவர். ஏழைகள் மீது அனுதாபமுடையவர். இவர் பின்லந்து பிரதம மந்திரியாக இருந்திருக்கிறார். பின்லந்து சட்டசபைத் தலைவர்களாகவுமிருந்தார். இன்று 'பின்லந்துவின் சர்வாதிகாரியாக இருக்கிறார். 35 லக்ஷம் பின்லந்து மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறார். பால்டிக் சமுத்திரத்தில் ஹிட்லரின் கண்ணோட்டம் விழுந்திருப்பது இவருக்குத் தெரியும் பின்லந்தின் சுதந்திரத்தை நசுக்க ஹிட்லர் திட்டம் போட்டிருப்பதையும் அவர் அறிவார். ஆகவே, ஹிட்லரின் பேராவலை எதிர்த்து, பின்லந்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்க இவர் உறுதி கொண்டிருக்கிறார். இதே உறுதி பின்லந்து மக்களுக்குமுண்டு. ஆனால், ஹிட்லர் இந்த நாடுகளை எதிர்த்தால், அவரை எதிர்த்து நிற்க இந்தச் சிறு தேசங்களுக்குச் சக்தி இல்லை. வல்லரசுகள் உதவினலொழிய இந்தச் சிறு நாடுகளின் சுதந்திரம் பறிபோவது நிச்சயம்.

## போலந்து

ஹிட்லர் கண்ணோட்டம் பாய்ந்திருக்கும் இந்தத் தேசங்களில் போலந்துதான் அதிக முக்கியமான தேசம். இது பெரிய தேசம். சுமார் $3\frac{1}{2}$ கோடி ஜனத்தொகை கொண்டது. 12 லக்ஷம் ராணுவங்கள் இன்று அங்கு தயாராக இருக்கின்றன. ஹிட்லர், டான்ஜிக்மீது பாய்ந்து, போலந்துமீது படையெடுத்துவர நினைப்பாரேயானால், அவரை எதிர்க்கப் போலந்து தயாராக இருக்கிறது. அதற்கு, ரஷியா பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகளில் ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. அந்த நாடுகள் உதவிக்கு வந்தாலுஞ்சரி, வராது போனலுஞ்சரி; போலந்துஜெர்மானியரை கட்டாயம் எதிர்த்தே தீருமென்பதில் சந்தேகமில்லை. போலந்தும், மகா யுத்த காலத்தில் சுதந்திரமடைந்த ஒரு புதிய தேசந்தான். இதின் சுதந்திரத்துக்குக் காரணமாயிருந்தவர் பில்ஸுட்ஸ்கி. இவரே போலந்தின் தந்தையென்று சொல்லுவார்கள். இவர் நாடு கடத்தப்பட்டு லண்டனிலிருந்த காலத்தில்தான் ரசாயன சாஸ்திரம் கற்றுக்கொள்ள இக்னேசி மொஸிகி லண்டன் சென்றார். அங்கு பில்ஸுட்ஸ்கியுடன் நெருங்கிப் பழகினார். அவரும் போலந்து அரசியலில் ஈடுபட்டுத் தீவிரமாக வேலை செய்தார். மகா யுத்த காலத்தில் பில்ஸுட்ஸ்கியின் சாதுர்யத்தால் போலந்து பூர்ண சுதந்திரமடைந்தது. ஆகவே, போலந்தின் தலைவராக பில்ஸுட்ஸ்கியையே தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், அவர் தலைவராக இருக்க மறுத்து, இக்னேசி மொஸிகியைத் தலைவராக நியமித்தார். இன்று வரை அவரே தலைவராக இருந்து வருகிறார். பில்ஸுட்ஸ்கி காலமானார். இன்று போலந்தின் தலைவராகவும், சர்வாதிகாரியாகவும் மந்திரிகளாகவுமிருப்பவர் நால்வர். போலந்து இன்று இவர்கள் ஆதரவிலேயே இருக்கிறது. இவர்களில் ஒருவர் கர்னல் பெக்; இவரே அந்நிய நாட்டு மந்திரி. முதன்மந்திரி ஜெனரல் ஸ்கிலட்கோவ்ஸ்கியும் முக்கியமானவர். இந்த இரு மந்திரிகளுமே, ரோம்-பெர்லின் அச்சைத் தகர்ப்பதற்கு ஏற்பட்டவர்களென ஐரோப்பியர் தமாஷாகக் கூறுவதுண்டு. அச்சு என்பது இரு முனைகளைச்சேர்க்கும் ஒரு நீண்ட கம்பி. அந்த முனைகள், அதாவது, ஆங்கிலத்தில் 'போல்ஸ்' என்று சொல்லப்படும். அந்த இரு போல்களும், விலகிவிட்டால், அச்சால், அதாவது, வெறும் கம்பியால் என்ன பயன்? அந்த இரு போல்களே, அதாவது, கர்னல் பெக், முதன் மந்திரி, ஜெனரல் ஸ்கிலட்கோவ்ஸ்கி என்னும் இரு போலந்து வீரர்களே. இன்று ரோம்-பெர்லின் அச்சைத் தீவிரமாக எதிர்த்து தகர்க்க உறுதிகொண்டிருக்கிறார்கள். இவர்களே அந்த அச்சை முறித்து எறியவும் கூடும். இவர்களுக்குத் துணையாக மற்றொருவர் இருக்கிறார். இவரேமார்ஷல்ஸ்மிதிலி-ரிட்ஜ் இவர் போலந்தில் அதிக செல்வாக்குடையவர். இவரைப் போலந்தின் சர்வாதிகாரியென்றுகூடச் சொல்லுவார்கள். இந்த நால்வரும் ஹிட்லரை எப்படியும் எதிர்த்தே தீருவதென உறுதிகொண்டிருக்கிறார்கள். டான்ஜிக்மீது ஹிட்லர் பாய்ந்தபின், ஜெக்கோவை விழுங்கியதுபோல், போலந்தை அலட்சியமாகக் கருதி, போலந்து மீது படையெடுப்பாரேயானல், அது ஹிட்லருக்குக் கேடுகாலமாக வந்து முடியலாம். போலந்து யுத்தம், ஒரு ஐரோப்பிய யுத்தமாகமாறுமென்பதில் சந்தேகமில்லை.

மாதங்கள் வேண்டாம் நாட்களும் வேண்டாம்;
ஒரே ஒரு மணி நேரத்தில்
வீரிய ஸ்தம்பனம் ஏற்பட
ரமண விலாசினி வடிகா
உபயோகியுங்கள்.
ஒரு டப்பி விலை ரூபா 1—0—0
மதனமஞ்சரி பார்மஸி,
1-94, சைனபஜார், மதராஸ்.

ஆப்ரேஷனை நீக்குங்கள்

தொண்டையில் உள்நாக்கின் இருபக்கங்களிலும் நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாஸ அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்களை

"டான்ஸ்லிட்"

அற்புதமாய்க் குணப்படுத்தும்

விவரங்களுக்கு:— ஆலன்கிலினிக்

இராயப்பேட்டை, மதராஸ்.

எல்லா மருந்து ஷாப்புகளில் கிடைக்கும்

# யுத்தத்தை தடுக்க வழி என்ன?

## வழ வழா பேச்சு வேண்டாம்

கடந்த வருஷம் ஜெக்கோ சம்பந்தமாக ஏற்பட்ட நெருக்கடிக்கும், இன்று போலந்து சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கும் நெருங்கிய ஒற்றுமை இருக்கிறது. ஜெர்மனிமீது ஒரு பாவமுமில்லையென்றும், ஜெர்மனிக்கு ஆக்ரமிப்பு எண்ணங்கூடக் கிடையாதென்றும், இதர நாடுகளே ஆபத்தை விளைவிக்கின்றனவென்

ஹிட்லர் டான்ஜிக்மீது பாய்ந்தால் கட்டாயம், போலந்துடன் சேர்ந்து ஜெர்மனியை எதிர்க்கப் போவதாகச் சேம்பர்லேன் மிரட்டினார். ஹிட்லர் டான்ஜிக்மீது படையெடுக்கும் பேச்சை நிறுத்தியிருக்கிறார். அவர் முஸோலினியுடன் யோசனை போட்டுக் கொண்டிருக்கிறார். அவர் போகும் ரயில் சிறிது தாமதமாகப் போவதாக முஸோலினியிடம் ஹிட்லர் புகார் செய்கிறார்.

றும் ஹிட்லர் பிரசாரஞ் செய்து வருகிறார். அதோடு திடீர் திடீரென்று ஹிட்லர் வெற்றியும் பெற்று வருகிறார். பிரிட்டிஷ் சர்க்கார் சும்மாயிருந்ததாலேயே அவர் வெற்றி பெற்று, சில நாடுகளை அடிமைப்படுத்தினார். சுயேச்சை நாடுகள் ஜெர்மனி ஆக்ரமிப்புக்கு உள்ளாவதை தடுக்கப் பிரிட்டிஷ் ஜனநாயக சர்க்கார் முற்பட்டிருக்குமானால் அவ்விதம் நடந்திராது.

### ஆபத்தான போர்வழி

ஹிட்லரின் மிக்க அபாயகரமான செயல் என்னவென்றால், அவர் ஜெர்மன்-போலந்து ஒப்பந்தத்தை ரத்து செய்ததே. ஜெக்கோ தேச மக்களை எப்படியும் அடிமைப்படுத்த வேண்டுமென்பதே ஹிட்லரின் நோக்கம். ஆனால், போலந்தின் பதில் ஜெக்கோ தேசத்தின் பதிலைப் போன்றதல்ல; ஜெக்கோஸ்லோவோகியா ஒரு சிறு நாடு; அது பிரான்சின் உதவியை ரொம்ப நம்பியிருந்தது.

பிரிட்டன் அதின் பெருமையை ஊதிக்கொண்டிருப்பதால் பயனில்லை. வீண் பெருமை பேசி வயிற்றைப் பெருக்கவைத்து, இறுதியில் வயிறு வெடிப்பதைவிட காரியத்தில் கவனத்தைச் செலுத்தி ஆண்மையுடன் நடந்துகொள்ளுவதே சரி.

ஐரோப்பாவை யுத்தமேகம் சூழ்ந்துகொண்டிருக்கிறது. யுத்தம் ஆரம்பிக்கப்போவதாக ஹிட்லர் ஜம்பம் பேசுகிறார். அவர் ''ஹம்பக்'' பேச்சைக் கண்டு பிரிட்டன் நடுங்குகிறது. வெறும் வழ வழா பேச்சில் காலம் கடத்திவருகிறது. பிரிட்டனும், பிரான்சும், சற்று ஆண்மையுடன் நடந்துகொண்டால், யுத்தத்தைத் தடுக்க வழியுண்டு. ஆனால், அந்த ஆண்மையும், உறுதியும் பிரிட்டனுக்கு வருமா?




ரஷியாவுடன் ராணுவ ஒப்பந்தஞ் செய்து கொள்ளப் பிரிட்டனும், பிரான்சும் பயப்படுகின்றன. பிரஞ்சு பத்திரிகைகள் ஸ்டாலினைப் பூதம்போல் காட்டி, சேம்பர்லேனையும், டலாடியரையும் கிண்டல் செய்கின்றன.

ஜெக்கோ ஹிட்லருக்கு விட்டுக் கொடுத்ததால் என்ன விளைந்ததென்பதை போலந்து நேரில் பார்த்திருக்கிறது. ஜினிவா 'வழா வழா' முறைகளையும் அது விரும்பவில்லை. போலந்துக்கு பிரான்ஸ்மீதிருந்த நம்பிக்கையும் மறைந்து விட்டது. ஜெர்மனி கை வைத்தால், போலந்து மக்கள் எதிர்த்துப் போராடியே தீருவார்கள்.

### போலந்து வீரம்

போலந்து ஒரு பெரிய தேசம்; ஆனால், பிரான்ஸ், ஜெர்மனியைப் போல் அவ்வளவு முன்னேற்றமானதல்ல. அதன்ஜெனரல்களும் பழைய ஆசாமிகள். அப்படியிருந்தும் போலந்து, ஜெக்கோ தேசத் தலைவர் பதில் அளித்ததுபோலன்றி, முறைப்பாகவே பதில் அளித்திருக்கிறது. போலந்தின் பூரண சுயேச்சையை நாசப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் ஹிட்லர், போலந்து வழியாக ஒரு ராணுவ ரஸ்தா அமைக்க வேண்டுமென்றும், டான்ஸிக்கையும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும் கொடுக்க வேண்டுமென்றும் கேட்கிறார். போலந்து தலைவர்கள் அந்த டான்ஸிக் பிரதேசம் போலந்தின் ஒரு பாகமாகுமென்று பதில் கூறுகிறார்கள்.

ஹிட்லர் போலந்துமீது படையெடுத்துச் செல்ல ஏராளமான ஜெர்மன் படைகளைப் போலந்து எல்லைப் புறத்தில் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். போலந்து அம்மையார் நாஜியரை எதிர்த்து நிற்கிறார். ''போலந்துக்குள் ஒரு அடி எடுத்து வை பார்ப்போம்! அப்புறம் உன் கதி என்னவாகிறது பார்!'' என்று அம்மையார் நாஜியரை மிரட்டுகிறார்.

## "ஹம்பக்" ஜம்பம்!

ஹிட்லர், ஜெர்மன் மைனாரிட்டிகளைப்பற்றி பேசினால், போலந்துத் தலைவர்கள் உடனே ஜெர்மனியிலுள்ள போலந்து மக்கள் மைனாரிட்டியைப்பற்றி பேசுகிறார்கள். ஹிட்லரை முதல் தடவையாக எதிர்த்த பிரதேசம் போலந்தே!

ஹிட்லர் தமக்குள்ளது போல் நியாய விரோதமான உணர்ச்சியை மற்றவர்களிடமும் விளைவிக்கிறார். போலந்து வாசிகள் பகிரங்கமாக ஜெர்மனியை எதிர்த்து வருகிறார்கள். அதனால் அவர்கள் மற்றொரு ''மூனிச்''சுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகப் பிரஞ்சு அந்நிய நாட்டு மந்திரி போனெட் பிரான்சின் பலத்தை அதிகப்படுத்தி வருகிறார். அதனால் கர்னல் பெக் நிலைமையை உள்ளபடி உணர்ந்து, அதற்குச் சரியான பரிகாரம் தேடி வருகிறார்; அதாவது, ஜெர்மனியைத் ,தனிமையாக எதிர்த்து நிற்கவும் அவர் துணிந்திருக்கிறார். பிறருக்கு ஆத்திரத்தை உண்டு பண்ண அவர் விரும்பவில்லை. போலந்து மக்களுக்கு திருப்திசெய்ய அவர் உறுதியாக இருக்கிறார்.




ரஷியாவுடன் ஒப்பந்தஞ் செய்து கொள்ளப் பிரிட்டனும், பிரான்சும், போலந்தும் தயார். ஆனால், ரஷியா அந்த மூன்று நாடுகளின் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. ரஷியாவுக்காக இதர தேசங்கள் காத்திருக்கின்றன.

### போலந்து இரையாகுமா?

ஹிட்லரும், கர்னல் பெக்கும் ஒருவர் பேச்சை மற்றவர் அறிந்து கொள்கிறார்கள். நிலைமை என்னமோ ஆபத்தானதாகவிருக்கிறது. சிறு விஷயத்தால் பெரும் போர் ஆரம்பமாகலாம். ஹிட்லர் யுத்தமின்றி தந்திரமாக போலந்தை பிடித்து விடுவாரென்று ஜெர்மனியர் நம்புகிறார்கள்.

(அடுத்த பக்கம் பார்க்க)

# யுத்தத்தைத் தடுக்க வழி என்ன?

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஜெக் நிலைமைக்கும், போலந்தின் நிலைமைக்குமுள்ள பெரிய வித்யாசம் என்னவென்றால், பிரிட்டனும், பிரான்ஸூம் கடந்த செப்டம்பர் மாதம் நடந்துகொண்டதுபோல், ஹிட்லரின் ஆக்ரமிப்புக்கு சும்மாயிருக்கப்போவதில்லை; ஹிட்லரை எப்படியாவது 'அடக்கிவிடவேண்டு'மென ஜம்பம் பேசுகின்றன. அரசியல் அபிப்ராய பேதமிருந்தபோதிலும், அவசியமானால் ஆக்ரமிப்பை தடுக்க ஜனநாயக நாடுகளிடை உறுதி ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, ஹிட்லர் நிதானமாகவே நடக்கவேண்டியிருக்கிறது. அதோடு முஸோலினிகூட யுத்தம் வேண்டாமென்பார். ஏன்? யுத்தம் வந்தால் இதாலிமீது பிரான்ஸ் படையெடுக்கும்; அதோடு இதாலிக்கு மத்யதரக் கடலிலும் ஆப்ரிக்காவிலும் ஆபத்து ஏற்படக்கூடும்.

இதாலி, ஜெர்மனி இவ்விரு நாடுகளுடனும் சம்பந்தம் வைத்திருக்கும் ஜப்பானோ சீனாவில் சிக்கிக்கொண்டிருக்கிறது. யுத்தம்வந்தால் பாஸிபிக் சமுத்திரத்தில் அமெரிக்க கப்பற் படைக்கும் ஜப்பான் பதில் சொல்லியாகவேண்டி வரலாம்.

## ரஷியா கோரிக்கை

ரஷியாவை சமாதான 'முன்னணி'யில் சேர்க்காததுதான் மிகவும் சிக்கலான விஷயமாகும். ரஷியா இல்லாமல் எவரும் எந்த உத்திரவாதத்தையும் நம்பமாட்டார். ரஷியாவோ, பிரிட்டனிடம் அதின் கோரிக்கைகளை சமர்ப்பித்து விட்டது.

ரஷியா கேட்கும் அளவுக்கு பிரான்சும், பிரிட்டனும்கட்டுப்படக் கூடாதென்பதற்காக பல கோஷ்டிகள் வேலைசெய்து வருகின்றன.

பிரிட்டிஷ் சர்க்கார் ரஷியாவுடன் பேரம்பேசி வருகிறது. பலவித சமரச முறைகளைச் சமர்ப்பித்து வருகிறது; யுத்தம் வந்தால் ரஷியாவை தனியாக விட்டுவிடப்போவதாகவும் பயமுறுத்திப் பார்க்கிறது. பிரிட்டனின் இவ்வித தாமதத்தாலும், தயக்கத்தாலும், ரஷியா தனியாக விருப்பதென்று முடிவு செய்யவும் கூடும்.

ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டாலொழிய, வேறு எந்த வழியும் அபாயமானதே. ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், ஹிட்லர் இரு பக்கமும் யுத்தம் செய்ய வேண்டியிருப்பதைப்பற்றி பயப்படுவார். ஆக்ரமிப்பு முறையை கைக்கொள்ள ஆரம்பிக்கக் கூடும்.

ஜெர்மனியை நாலாபுறமும் சூழ்ந்துகொள்ள ஜன நாயக வல்லரசுகள் முயலுவதாகக் கோபெல்ஸ் ஜெர்மனியில் பயம் ஏற்படுத்தி வருகிறார். இந் நிலையில், ரஷியாவுடன் பிரிட்டன் ஒப்பந்தம் செய்துகொண்டால் அதின் காரணமாக யுத்தம் ஏற்படுமா? இக் கேள்விக்கு இருவித பதில் உண்டு. ஹிட்லரின் ஆக்ரமிப்புக் கோலம் யுத்தத்தை நிச்சயமாக்குகிறது. போலந்தும், இதர நாடுகளும் அவசிமானல் ஜெர்மனியை எதிர்த்தே தீரும்.

## ஜெர்மனி திண்டாட்டம்

யுத்தம் தவிர்க்கப் படவேண்டுமென்று உலகம் விரும்புவதுபோல், ஸ்டாலினும் யுத்தத்தைத் தவிர்க்க ஆவலுடையவராகவிருக்கிறார். ரஷியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபிறகு, பிரிட்டன், அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்டைப்போல் ஒரு வேண்டுகோள் அனுப்பலாம். மகா நாடு கூடி பேசலாமென்ற யோசனையை ஹிட்லர் விரும்பவில்லை. கலந்து பேச பிரிட்டிஷ் சர்க்கார் தயாராகவிருக்கிறதென்பதை ஜெர்மனிக்குப் பன்முறை வற்புறுத்திக் கூறி வந்தால், ஜெர்மனியரிடை மனமாற்றம் ஏற்படலாம். இரு முனைகளிலும் யுத்தத்தை ஹிட்லர் விரும்பவில்லையென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மற்றொரு விஷயம். ஜெர்மன் ராணுவ அதிகாரிகளைக் கலந்து கொள்ளாமல், ஹிட்லர் யுத்தத்திற்கு முடிவு செய்ய முடியாது.



ஹிட்லர் கண்ணோட்டம் பாய்ந்திருக்கும் டான்ஜிக் நகரம். அங்கு ஜன நெருக்கடி அதிகம். பெரிய கோவில்களும், கோபுரங்களும் ஏராளமாக உண்டு. டான்ஜிக் நகரத்தில் முக்கியமாகப் போலந்து சர்க்கார் அபிவிருத்தி செய்திருக்கும் ஒரு பகுதி. இது ஒரு அழகான பிரதேசம். இதைக் கவரவே நாஜியர் நினைக்கிறார்கள்.

பிரிட்டிஷ் மந்திரிகள் பழைய கொள்கைகளைக் கட்டி அழாமலிருந்தால், ஹிட்லர் நிலைமையை முற்றிலும் மாற்றக்கூடிய பாஷையில் பேசலாம். ஐரோப்பாவிலுள்ள ஜனநாயகத் தலைவர்கள் ரூஸ்வெல்ட்டுடன் ஒத்துழைப்பார். ஜனநாயகத்தின் சிறப்பையும் நிலைநாட்டக் கூடும்; பிரிட்டிஷ் சர்க்கார் பழைய பல்லவிகளைக் கை விட்டால்தான் அது சாத்யமாகலாம்.

பிரிட்டிஷ்மந்திரிகள் கடந்த காலத்தில் செய்த தவறுகளை ஒப்புக்கொள்ள வேண்டும்; ஜெர்மானியர் மனதை இளகச் செய்யத்தக்க தொனியில் பேசவேண்டும்; ஜெர்மனியை நாலாபுறமும் வளைத்துக் கொள்ள வேண்டுமென்ற கொள்கை பிரிட்டனுக்கு இல்லையென்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இவ்விதம் பார்லிமெண்டில் சேம்பர்லேன் பேசினால் ஜனங்கள் அதை வேறு விதமாக அர்த்தப் படுத்திக் கொள்ளுகிறார்கள். ஜெர்மன் ஆக்ரமிப்பை அவர் ஆட்சேபிக்கவில்லையென்று பொதுவாகக் கருதுகிறார்கள்.

பிரிட்டன், ஜெர்மனிக்கும் உத்தரவாதம் அளிக்கவேண்டும்; போலந்துக்கும், ருமேனியாவுக்கும் அளித்த உத்தரவாதம் ஜெர்மனிக்கும் அளிக்கப்படவேண்டும். ஜெர்மன் பிரதேசத்தைத் தொடுவதில்லையென்றும் ஆனால், பிறநாடுகளை ஜெர்மனி தொட்டாலும் உதவி அளிப்பதாகவும் பிரிட்டிஷ் சர்க்கார் உத்தரவாதம் கூறவேண்டும்.

## கொள்கை மாறுமா?

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள நாடுகளுக்குச் சுதந்திர அபிவிருத்திக்காக, சர்வதேச அடிப்படையில் இதர நாடுகளுடன் ஒத்துழைக்க தயாராக விருப்பதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் விளம்பரப்படுத்த வேண்டும்.

அவ்வித வார்த்தைகள் அடிக்கடி பிரயோகிக்கப் படவேண்டும். அவ்வித வார்த்தைகள் இந்தியாவிலும், அராபியா, ஆப்ரிக்காவிலும் நன்றாக வரவேற்கப்படும். சுதந்திரத்தை விரும்பாத மக்கள் உண்டோ? அவ்விதமான பிரச்னைகளைப் பகிரங்கமாகப் பேச தயாராகவிருப்பதாகவும், மேற்கொண்டு ஆக்ரமிப்பு சகிக்கத் தக்கதல்ல வென்றும் பிரிட்டிஷ் மந்திரிகள் உலக மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அப்படியானால் பிரான்ஸ், ரஷியா முதலிய நாடுகளின் உதவியும், உலக மக்கள் உறவும் பிரிட்டனுக்குக் கட்டாயம் கிடைக்கும்.

சமரசபான்மையில் உதவினால் ஜெர்மனியர் மனம் மாறும், ஹிட்லர் யுத்தம் ஆரம்பிப்பது சாத்யமில்லாதுபோய்விடும். யுத்தத்தைத் தடுக்க இதுதான் வழி.


நீங்கள் மறந்துவிட வேண்டாம்!




ரா லி

உலகில் பேர்பெற்ற இந்த அலாரத்தின், அழகான வேலைப்பாடுகளையும், புகழையும் நீங்கள் என்றும் மறக்க முடியாது. அது உங்களுக்கு சதா ஒரு எண்ணத்தை ஞாபகமூட்டிக்கொண்டேயிருக்கும்.

இதற்குக் கொடுக்கும் விலைக்கு இது உயர்ந்த தென்பதாகவே ஆபீசர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

விலை ரூ. 4-4-0.

தபால் செலவு வேறு.

4 அங்குல டயல், உறுதியும், தூசி அடையக்கூடாததுமான நிக்கல் கேஸ்; நிலையான அலாரம் பெல்.

2 வருட உத்தரவாதம்.

ஜலால் அண்டு சன்ஸ்,
(கவர்ன்மெண்ட் கண்ட்ராக்டர்ஸ்)
மதராஸ், ஹைதராபாத்.



தாளக-ரஸம்! உடனே குணம்!

இருமல்-இளைப்பு

ஓயாத இருமல், இளைப்பு, ஏங்கல், மூச்சு திணரல், நெஞ்சு வலி கோழைக் கட்டு மயக்கம் வாந்தி சுவாசகாசம் மந்தார காசம் எவ்வித கஷ்டமாயினும் சரியே ஒரே நாளில் நல்ல குணமாகி விடும். குணமில்லா விடில் பணம் வாபீஸ். இது உயர்ந்த முறை. பந்தயமிடக்கூடியது.

1 புட்டி ரூ. 5. ½ புட்டி ரூ. 3.

கே. எஸ். பதி வைத்தியசாலை.
பழனி. S. I.



மலேயாவிற்கு

மலேயா நாடு பூராவிற்கும் தமிழ் மணி விற்பதற்குத் தகுதி வாய்ந்த ஸோல் ஏஜண்டு தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப் படும். நாணயமுள்ளவராகவும் போதிய டிப்பாஸிட் கட்டக்கூடியவராயுமுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

மானேஜர்,
தமிழ் மணி
ஜி. டி. மதராஸ்.

சிறு கதை

# ரோஜா செய்த தவறு

மகாதேவன்

டிங், டிங்...என்று மணி 10 அடித்தது வீர சிங்கன் வீட்டுக் கெடியாரம். "ஆ! திருடர்களுக்குச் சாவு மணி அடித்துவிட்டது" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான் வீரசிங். அவனுக்குக் கோபம் பொங்கியது. சட்டைப் பையிலிருந்த கைத்துப்பாக்கியை அவன் கைகள் துளாவின; முகத்தைச் சுளித்துக்கொண்டான். அவனால் வெறுக்கப்பட்ட அந்த பயங்கரமான கடிதமே மீண்டும் மீண்டும் அவன் கையை வந்தடைந்தது.

ஆத்திரத்துடன் அந்தக் கடிதத்தை எடுத்து 'டக்'என்று மேஜை மீது வைத்தான். மேஜையின் பக்கத்தில் அவனுடைய சின்னஞ்சிறு குழந்தை விளையாடிக்கொண்டிருந்தாள்; வீர சிங்கன் கண்கள் அக்குழந்தையை வெறித்துப் பார்த்தன. நெற்றிக் கண்ணை மட்டும் கடவுள் அவனுக்குஅளித்திருந்தால், அன்று 'ரோஜா' சாம்பலாய்ப் போயிருப்பாள். வீர சிங்கன் கோபத்தைக் கண்டாளா, குழந்தை ரோஜா? ஆனந்தமாக நெய் விளக்கின் அருகில் உட்கார்ந்துகொண்டு என்னென்னமோ கடிதங்களை யெல்லாம் கொளுத்திக்கொண்டிருந்தாள்.

"அட, சனியனே மறுபடியும் வந்து விட்டாயா?" என்று சொல்லிக்கொண்டே ரோஜாவின் கன்னத்தில் ஓர் அறை அறைந்தான் வீரசிங். ரோஜா அழுதுகொண்டே உள்ளே ஓடினாள்; சிறிது நேரத்திற்கெல்லாம் ரோஜாவை இடுப்பில் வைத்துக்கொண்டு வீரசிங் மனைவி 'பத்மா' அங்கு வந்தாள்.

"நன்னாயிருக்கு, ஆடு கழிச்ச மற்றும் நாள் கோழி அடிச்சுக் கும்பிட்டாளாம்! அந்தக் கடுதாசி அவ்வளவு முக்கியம்னு அந்தக் குழந்தை கண்டாளா? ஏதோ விளையாட்டாக கடுதாசியை நெய் விளக்கில் கொளுத்திக்கொண்டிருந்தாள். அது முழுதும் எரிஞ்சுபோறத்துக்கு முன்னே பிடுங்கி மேஜை மேலே வச்சேன். இப்போ என்ன குடி முழுகிப் போச்சு? எதுக்காக இப்படிக் குழந்தையைப் போட்டுக் கொல்லனும்?" என்று நீட்டி முழக்கிக்கொண்டே பேசினாள் பத்மா.

அவள் பேசப் பேச வீரசிங்கன் கோபம் அதிகரித்தது. "ஆமாம், குடி தாண்டி முழுகிப் போச்சு! இந்தக் கடுதாசியைப் பார்!" என்று சொல்லிக்கொண்டே பாதி எரிந்து போன அந்தக் கடிதத்தைப் பத்மாவின் முகத்தில் வீசி எறிந்தான் வீரசிங். பத்மா குனிந்து அக்கடிதத்தை எடுத்தாள். ஒரு முறை, இரு முறை, மும்முறையும் படித்தாள். அக்கடிதத்தில் என்னதான் இருக்குமோ தெரியவில்லை? பத்மா படித்தவள்தான்; படிக்கப் படிக்க அவள் முகம் வியப்பையும், திகைப்பையும் காட்டியது; மனம் திகிலடைந்தது. இருதயம் "பட்-பட்" என்று அடித்துக்கொண்டது. கடிதத்தில் வேறு ஒன்றுமில்லை. பின் வரும் வரிகள்தான் காணப்பட்டன. மற்றைய பாதி அக்கினி தேவனுக்கு இரையாக்கப்பட்டது. இதுதான குழந்தை ரோஜா செய்த புண்ணியம்.

நாளை இரவு 11 மணி.............
அவ்விடம் வருகிறேன்.............
ரூபாய் 1,000 தயார்.............
தவறினால்.............
இழக்க நே.............
இப்படி.............

"என்ன? இதொன்றுமே புரியலையே? கடிதாசி யார் கிட்ட இருந்து வந்திருக்கு?"

"யார் கிட்டெயிருந்தா? அதாண்டி, பிஹார் திருடர் நம்ம ஊருக்கு வந்திருக்காளோ யில்லெயோ? அவா நம்ம வீட்டுக்கே திருடரத்துக்கு வரப்போருளாம்!"

"ஐயையோ! நம்மாத்துக்கே லெட்டர் வந்துட்டதா? பாவி! என்ன நெஞ்சழுத்தம்."

"உஸ்! சத்தம் போடாதே! அவர்கள் வரும் சமயமாய்விட்டது."

"பாவி! என்னமோ ஆயிரம் ரூபாய்னு எழுதியிருக்கானே அது என்ன?"

"அதாண்டி, நம்ப அவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்துடனுமாம்."

"இல்லென்னு?"

"இல்லென்ன என்ன! உயிரை இழந்துடணமாம்."

"ஐயையோ! உயிரையே இழந்துடணுமா? இந்த சனியெல்லாம் நமக்கு வேண்டாம். அவர்களுக்கு ஒரு ஆயிரம் ரூபாயை தொலைத்து விடுவதுதானே?"

"போடி பைத்தியக்காரி! சப் இன்ஸ்பெக்டர் மனைவியாட்டமா ம்பசலையே நீ? என்னமோ பயந்து சாகராயே. நான் யார்னு நெனச்சுண்டிருக்கே?"

ஒரு சப் இன்ஸ்பெக்டரே ஒரு திருடனுக்குப் பயந்து கொண்டு பணத்தைக் கொடுத்தாரென்று ஊராருக்குத் தெரிந்தால் அவர்கள் சிரிக்க மாட்டார்களா? இன்றைக்கு எப்படியானாலும், அந்தத் திருடர்களைப் பிடித்துவிடலாமென்று ஏற்பாடு பண்ணியிருக்கேன். அடியே! இன்னிக்குமட்டும் நான் இந்தத் திருடர்களைப் பிடித்து ஜெயிச்சுட்டாக்கா, என்ன ஆகும்னு தெரியுமோயில்லையோ? நாளைக்கே நீ சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பெண்டாட்டியாகிவிடுவாய்! உம்...ஞாபகமிருக்கட்டும்."

"உங்களுக்கு வேறே வேலையில்லை! என் வயிற்றெரிச்சலைக் கிளப்பறதுன்னு தயாராயிருக்கேன். இத்தனை வயசுக்குமேலே நான் ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டரைக் கல்யாணம் பண்ணிக்கினுமாம்! அது ஒன்னுதான் பாக்கி', என்று கூறி பத்மா சீறிச் சினந்தாள். அவள் கண்கள் கலங்கின.

"அட அசடே; இப்படி ஒன்னுமில்லாததற்கெல்லாம் அழ ஆரம்பிக்கிறாயே! எனக்கு நாளைக்கே 'சர்க்கிள் இன்ஸ்பெக்டர்' உத்தியோகம் பிரமோஷன் ஆய்விடும். அப்புறம் நம்ம குழந்தை வசந்தாவுக்கு கல்யாணத்துக்கு ஒன்னுமே குறைச்சல் இல்லை."

"ஐயோ! எனக்கென்னமோ பயமாய் இருக்கு. ஏன்? யாராவது மேல் உத்தியோகஸ்தனுக்குச் சொல்லியனுப்பரதுதானே? உங்கள் 'ஏட்'டுக்கு சொல்லியனுப்பிச்சேனா?"

"அடி போடி பைத்தியக்காரி. கஷ்டப்படுவது நான்; பரிசு பெறுவது மற்றொருவராக்கும்! என் கையில் என்ன இருக்கிறதுன்னு நெனைச்சுண்டிருக்கே? என்று கூறிக் கொண்டே ரிவால்வரைத் தூக்கிக் காட்டினான் வீரசிங்.

வீரசிங், மாயாபுரிக்கு வந்து சில நாட்கள் தான். அங்கு திருட்டு அதிகம். வீரசிங்கைவிட வேறு திறமையான உத்தியோகஸ்தர் அந்த ஜில்லாவிலேயே இல்லை. ஆதலால் வீரசிங்கை இந்த ஊருக்கு 'ஸ்பெஷல் ட்யூடியில்' நியமித்தார்கள். வீரசிங் பெயருக்குத் தகுந்தாற்போல் தைர்யசாலிதான். என்னமோ அவருடைய துரதிருஷ்டம் அந்த ஊரில் ஒரு கேஸ்கூட பிடிபடவில்லை. இன்னும் ஒரு வாரத்துக்குள் ஒரு கேஸாவது பிடிக்காவிட்டால், உத்தியோகம் போய்விடும் என்று மேலதிகாரிகளிடமிருந்து கண்டிப்பான உத்தரவு வந்திருந்தது. வீரசிங்கிற்கு வயது 45 இருக்கும். பார்வைக்கு 30 வயது போலவே காணப்படுவார். கன்னங்கரேலென்ற மீசை முறுக்கியபடியே காக்ஷியளிப்பார். ஆள் நல்ல வாட்டசாட்டமானவர்! அவர் மனைவி பத்மா, பெண் வஸந்தா, கடைக்குட்டி ரோஜா இவர்கள் கொண்டதே அவர் குடும்பம். அவருடைய வரவிற்குமேல் சிலவு அதிகம். வஸந்தா நல்ல அழகுள்ளவள் தான்; வயதும் 16 ஆகிவிட்டது. வீரசிங்கன் துரதிருஷ்டம் தான் அவர் இன்னும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகவில்லை. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆனால் தான் 'வசந்தா'விற்கு ஆடம்பரமாகக் கலியாணம் நடத்தலாம் என்று அவர் கனவு கண்டு கொண்டிருந்தார். எப்படியும் வஸந்தாவிற்கேற்ற வரன் தேடி வைத்துக் கொள்ளலாம் என்பது தான் அவருடைய எண்ணம். அந்தப் பொறுப்பை அவர் தம்பி 'துரைசிங்'கிடம் ஒப்படைத்தார்.

வீரசிங் மனோ ராஜ்யம் செய்ய ஆரம்பித்தார். இதைவிட வேறு சந்தர்ப்பம் வாய்ப்பது அரிது என அறிந்தார். வலையில் சிங்கம் தானாக வந்து விழுவதாக இருந்தால், யாராவது வேண்டாம் என்று தடுப்பார்களா? தற்சமயம் அவர் தம்பி துரைசிங் அவரோடிருந்தால் எவ்வளவு உதவியாகயிருக்கும் என்பதை எண்ணி வருந்தினார். ஆனால் அதை இப்பொழுது நினைத்து என்ன பயன்? தம்பி வரன் தேடுவதற்காக வெளியூருக்குப் போயிருந்தான்.

ஒய்வொழிவற்ற கடிகாரமும் மணி 11 அடித்தது. வீரசிங்கன் கை கைத் துப்பாக்கியை இறுகப் பற்றியது. மனைவி, குழந்தை முதலியவர்களை ஓர் தனி அறையில் போய் ஒளித்திருக்க ஏற்பாடு செய்துவிட்டு, விளக்குகளை அணைத்துத் திருடர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். "டக் டக்" என்று யாரோ வீட்டினுள் உள்ளே நுழையும் சப்தம் கேட்டது. அவனைத் தொடர்ந்து இன்னொருவனும் பூனைபோல் சென்றான். வீரசிங் அவரைத் தயார் செய்துகொண்டு, நெஞ்சைத் தட்டிக் கொடுத்தார். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உதவியை ஒரு தடவை எண்ணிப் பார்த்தான். என்றுமில்லாத தைரியம் அவனை வந்தடைந்தது. "படீர்" என்று வெடித்தது அவனுடைய கைத் துப்பாக்கி.

(அடுத்த பக்கம் பார்க்க)


## நாவிற்கு லஞ்சம் கொடுக்காதீர்!

சாதாரண பெருங்காயங்களெல்லாம் வெறும் சுவையை மாத்திரம் கொடுத்து நாவை வசப்படுத்துகிறது. ஆனால் அறிவுள்ள மனிதர் தங்கள் உணவுப் பொருட்களை வாங்குவதில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் டி. டி. பெருங்காயத்தையே ஏற்றுக் கொள்கின்றனர். ஏனென்றால் அதுவே பதினாறு வருட ஆராய்ச்சியின்பின் தயாரிக்கப்பட்ட உயரிய சரக்காகும். இரஸாயன முறைப்படி தயாரிக்கப்பட்ட டி. டி. பெருங்காயத்தில் நற்மணமும் நற்சுவையும் இருப்பதுமன்றி பௌதீக சாதனங்களும் (22 20 சதம்) இரும்புச் சத்து அடங்கியிருக்கின்றன.

நல்ல பதார்த்தங்களோ வேண்டிய அளவு போட்டால் ஜீரண சக்தியை சுலபமாக்குகிறது.

பரிசு கூபன்களுடன் விற்கப்படுகின்றது விலை பவுண்டு ரூ. 1—14—0

ஆகவே வாங்குங்கள்

SCIENTIFIC TT ASAFOETIDA

டி. டி. ஸையன்டிபிக் மிஸ்கி பெருங்காயம்

# ரோஜா செய்த தவறு

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கண நேரம். "ஐயோ!" என்று அலறி விழுந்தான் திருடன் வீரசிங்கின் உள்ளம் குளிர்ந்தது. பக்கத்தறையில் திகிலுடன் நின்றிருந்த மனைவி, பெண், குழந்தை, முதலியவர்கள் திடுக்கிட்டு ஓடிவந்தார்கள். வீரசிங்கின் முகத்தில் வீர லக்ஷிமி தாண்டவமாடினாள். சுவரில் இருந்த விசையைத் திருப்பினார். அறை முழுவதும் பிரகாசமடைந்தது.

"தம்பி துரைசிங் ஐயோ!... என்று அலறித் துடித்தான் வீரசிங்.

"ஐயோ! என்ன காரியம் செய்தீர்கள்" என்று துடி துடித்தாள் பத்மா. அவன் பக்கத்தில் ஒரு வாலிபன் கல்லாய்ச் சமைந்து நின்றான். அடிபட்டவனுக்குச் செய்யவேண்டிய சிகிட்சைகள் செய்தார்கள். துரைசிங்கின் உயிருக்கு ஆபத்தில்லை. குண்டு காலில் பாய்ந்ததனால் உயிருக்கு ஆபத்து வரவில்லை.

"தம்பி, ஏதோ தவறுதலால் மோசம் நடந்துவிட்டது. திருடர் வரும் சமயமாகிவிட்டது. நாம், திருடர் வரும் சமயத்தில் நீ வந்து சேர்ந்து தயாராயிருக்கவேண்டும்" என்றான் வீரசிங். அவனுக்குத் திருடர் எண்ணம் போகவில்லை.

"அண்ணா, திருடர்களா? எப்போ வராள்?" என்றான் துரைசிங்.

"தம்பி, இதோ பார் கடிதம்" என்று பாதி எரிந்து போன கடிதத்தைத் தம்பியின் கையில் கொடுத்தான். தம்பியின் முகம் மாறுபட்டது, அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை;

"இது திருடர் கடிதமல்லவா?" வீரசிங் பிரமித்துப் போனான்..."

"உன் கடிதமா?..."

"ஆம்; இது நான் எழுதிய கடிதமே! கடிதம் பாதி எரிந்துபோய் விட்டபடியால் நீங்கள் முழுவதும் படித்தறிந்து கொள்ள முடியவில்லை. நான் எழுதியதைப் படிக்கிறேன். கேளுங்கள்.

மதராஸ்.
10-5-31

நாளை இரவு 11 மணிக்கு பையனுடன் நான் அவ்விடம் வருகிறேன். வரதக்ஷிணை அட்வான்ஸுக்கு ரூபாய் 1000 தயார் செய்துவைத்துக்கொள்ளவும் தவறினால் நாம் இந்த அருமையான வரனை இழக்க நேரிடும்.

இப்படிக்கு
உன் அன்புள்ள தம்பி,
துரைசிங்.

வீரசிங்கின் மனக்கோட்டை பாழாகியது. அப்பொழுதுதான் பூமி சுற்றுவது உண்மை என்று சப் இன்ஸ்பெக்டருக்குத் தோன்றியது; பூமி சுற்றுவதைப்போலவே அவன் தலையும் சுற்றுவதை உணர்ந்தான்.

TRADE MARK Registered.
இழுப்பு இருமலுக்கு
ஸ்டாக்ஸ்:—
சுவாசகாச நிவாரணி
கைகண்ட ஔஷதம்.
எங்கும் கிடைக்கும்.
ஜி. எஸ். ஸ்டியர்ஸ் கம்பெனி'
21, எர்ரபாலு செட்டி, வீதி, மதராஸ்

* டிராலி *
கஸ்தூரி சோப்

தினசரி உங்கள்
ஸ்நானத்துக்கு
உபயோகித்து
வாருங்கள்
உங்கள் தேகம்
நறுமணம் கமழும்
இன்றே இதை
வாங்கிப் பரீட்சித்
துப் பாருங்கள்
அதின் உயர்ந்த குணம் தெரியும்
A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு, மதராஸ். பிராஞ்சு:-மதுரை.

TRADE MARK
ஜகப் பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத் தூளை
உபயோகியுங்கள்.
1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8
ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்:—ஆர். முகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.

பாரத நாட்டில் பெயர் வாய்ந்ததும், பழமையும் முதன்மையுமான
சித்த ஆயுர்வேத நிலயம் எம்முடையது என்பதை எவரும் மறுக்கமுடியாது.
சமஸ்தான வைத்திய நிபுணரான பழனி சி. எம். சாமி மருந்துகள்
உன்னதமானவையென எங்கும் கியாதிபெற்றிருத்தலே இதற்குச் சான்றாகும்.

தாதுபலமில்லையா? * சூதகவயிற்றுவலியா?

மன்மதக் குளிகை
சாப்பிடுங்கள்!
ஆச்சரியப்படுவீர்கள்.
வாலிப பருவத்தைப் பாழாக்கி,
தேக பலத்தையும்
ஆண் தன்மையையும் இழந்து
அவதிப்படுபவர்களுக்கு
இது ஒரு அருமையான
டானிக்
இல்லற சுகத்தையும்,
இணையற்ற பாக்கியத்தையும்
தரவல்லது.
ஒரு முறை பரீட்சியுங்கள்.
20-குளிகை விலை ரூ. 2.

தற்புகழ்ச்சியல்ல!
இவ்விரு மருந்துகளும் சொன்னபடி குணமளிக்கத் தக்கவை எனப் புகழ்ந்து ஏராளமான நற்சான்றுகள் வந்து கொண்டிருக்கின்றன; இதனைச் சோதிக்க உங்களுக்கும் ஒரு சமயம் கிடைத்திருக்கிறது.
கியாட்லாக் இனும்!

கர்ப்ப எண்ணெய்
சாப்பிடுங்கள்
வலி பஞ்சாய்ப் பறக்கும்.
பெண்களின் உடல் நலத்தைப்
பாதிக்கக்கூடிய
சூதக நோய்கள், சூதகத் தடை,
ஜன்னி, அகாலப்பிரசவம்,
கருவழிதல் முதலியன
தீரும்
ஏராளமான ஸ்திரீகள்
உட்கொண்டு பூரண குணம்
அடைந்துள்ளனர்.
ஒருமுறை உபயோகியுங்கள்.
புட்டி 1க்கு விலை ரூ. 2.

(பிராஞ்சு) 1-54, அருணாசல நாயக்கன் தெரு, சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

தலைமை ஆபீஸ்
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S. I. 3

உங்கள் நோய்களுக்கு பரம ஔஷதம்

—: எது தெரியுமா? :—

# ஜீவக புஷ்ப லேகியம்

இது அனேக மூலிகைகளினுலும்,
பழ ரசங்களினுலும்
தயார்செய்யப்பட்டது.

சாப்பிடுவதற்கு ருசியாக இருப்பதோடு, உங்கள் குடல் சம்பந்தமான சகல நோய்களையும் குணப்படுத்தி, உங்கள் மேனியைப் பொன் மேனியாக்கிவிடும்.

மலச்சிக்கல், மூல ரோகம், குடல் புண்கள், கிருமி உபத்திரவம், வயிற்று வலி, வாயுபொருமல், புளித்த ஏப்பம், நெஞ்சு அரிப்பு, கை கால் வலி, இடுப்பு வலி, பித்தம், தலை சுழற்றல், மந்த ஜுரம் முதலிய சகல நோய்களுக்கும் கைகண்ட மருந்து.

ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும்
எவ்வித பத்தியமுமின்றிச் சாப்பிடலாம்.

உபயோகிக்கும் முறை மருந்துடன் உங்களுக்குக் கிடைக்கும்.

இன்றே இந்த

## ஜீவக புஷ்ப லேகியத்தை

உபயோகித்துப் பாருங்கள்.

| | |
|---|---|
| 1 ராத்தல் விலை ரூ. 8—0—0 | ¼ ராத்தல் விலை ரூ. 3—0—0 |
| ½ „ „ 5—0—0 | 2 அவுன்ஸ் விலை ரூ. 1—8—0 |

சோல் டிஸ்டிரிபூடர்ஸ்,

**போஸ்கோ மெடிகல் ஸ்டோர்ஸ்,**

நெ. 5, சவுரிமுத்து தெரு, மண்ணடி, ஜி. டி. மதராஸ்.



## ஆனந்தம் மனோ உற்சாகம்

உடையவர்களாயிருக்கவேண்டுமாகில் நீங்கள் எல். ஜி. பெருங்காயத்தையே வாங்கி உபயோகியுங்கள். லட்சக்கணக்கான மக்கள் அதன் அருமையை அறிந்து அதையே வாங்கி உபயோகிக்கிருர்கள்.

# எல். ஜி.

## பெருங்காயமானது

எல்லா பெருங்காயங்களிலும் தலை சிறந்தது
நீங்கள் பெருங்காயம் வாங்கும்போது
எல். ஜி. மார்க் போட்டிருக்கிறதாவென்பதைக்
கவனித்து வாங்குங்கள்

போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்

**லால்ஜி கோது அன் கோ,**

சௌகார்பேட்டை, மதராஸ்.



## சமஸ்தானங்களில் சத்தியாக்கிரஹம்




என்று பத்திரிகையில் படித்த மாத்திரத்தில், விஷயத்தை அறிய முடியாது! சமஸ்தானங்களின் வருஷ வருமானம், ஜனத்தொகை விஸ்தீரணம், எங்கு இருக்கிறது, நிர்வாகம், அதிகாரம் முதலியனவற்றை தெரிந்து கொண்டால் தான், சத்தியாக்கிரஹத்தின் தன்மை விளங்கும். இவ்வளவுவிஷயங்களைக் கொண்டுள்ளது

**“ராஜகோட்டை சத்தியாக்கிரஹம்”**

அழகான முகப்பு வர்ண மகாத்மா படம், இந்தியா தேசப் படம், மன்னர்களின் படம் முதலியன இருக்கின்றன.

**250 பக்கங்கள்**

**விலை அணு 12.**

எல்லா “ தமிழ் மணி ” ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.



ஜோதிஷம் கவசங்கள், தாயத்துகள், உபாசனை,

E. S. K.
சுவாமி
ஜோதிஷர்

ஏற்கனவே அச்சிட்டுத் தயாரான பலாபலன்கள் இவை தற்கால ஏமாற்றமாய் முடிகிறது. வீண் ஆடம்பரமின்றி, அவரவர்கள் நன்மை தீமைகளை அறிய அப்போதைக்கப்போது ஜாதக ரீதியாகவும், ஆரூட ரீதியாகவும் பலாபலன்கள் எழுதி அனுப்பப்படும். L. V. S. மணி (B. A. Hons Maths) அவர்களால் கணிக்கப்பட்டு 5கேள்விகளுக்கு பதில் ரூ. 1. ஒருஜாதகம் கணிக்க ரூ. 2. ஒரு வருஷ பலன் ஆந்திராந்திர விபரமுடன் ரூ. 2. ஒரு தசைக்குப் பலன் எழுத ரூ. 5. ஆயுள்வரை பொதுப் பலன் ரூ. 10. பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம் அல்லது தபால் எழுதும் நேரம் தேவை.

“ பிரஹத் ஜோதிஷ நிலையம் ”

நெ. 71, அக்ரஹாரம், புரசைவாக்கம், மதராஸ்.

இரும்புபெட்டி

அரிசி அல்லர்

ஸ்தாபிதம் 1914 டெலிபோன் நெம்பர் 2224

புராதீன இரும்புபெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும், நடராஜன் இன்ஜினீரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

**பி. நடேசமுதலியார்**

உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள், அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனி சாமான்கள், இதர மிஷனெரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்பவர்.

**59, பிராட்வே, மதராஸ்.**

மாவு மில்

சீயக்காய் மில்

200 வாட்சுகளே கைவசமிருக்கின்றன.
உடனே முந்துங்கள்.
மறு சமயம் இந்த விலைக்குகிடைப்பதரிது.

1. சரியான மணியை காண்பிக்கக்கூடிய 5 வருஷம் காரண்டியுள்ள குரோமியம், லீவர் ரவுண்டு கடியாரம் 1-க்கு ரூ. 2-14-0. 2. மேற்கண்ட பிரகாரம் 18 காரட்டு ரோல்டுகோல்டு கடியாரம் 1-க்கு ரூ. 3-14-0. 3 இந்த படத்தில் காண்பித்த மாதிரி லீவர், குரோமியம் ரிஸ்டு வாட்சு 1-க்கு ரூ. 4-8-0. 4. 18 காரட்டுரோல்டுகோல்டு கடியாரம் 1-க்கு 7-8-0 (தபால் சார்ஜ் பிரத்தியேகம்)

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனு பஜார் ரோட், மதருஸ்.



இனம்! இனம்!! இனம்!!!

## காம சாஸ்திரம்

தேக சுகத்தையும், தீர்க்காயுளையும் அடைவதற்கு ஓர் சிறந்த வழி காட்டி இன்றே வாசியுங்கள். கேட்பவர்களுக்கு இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும். உங்களுடைய விலாஸத்தை உடனே தெரிவியுங்கள்.

**ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,**

26 பிராட்வே, மதராஸ்.

இந்தியா
தனிப்பிரதி
விலை ஒரு அணு
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா 4-0-0.

இலங்கையில்
தனிப்பிரதி சதம் 7
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

# தமிழ் மணி

பர்மா,
தனிப்பிரதி 0-1-6.
வருட சந்தா ரூ. 5.

மலாய்
தனிப்பிரதி சதம் 10
வருட சந்தா ரூ. 7.

ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

ஏழை என்றும் அடிமை யென்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

## இந்தியாவின் உயிர் நாடி போன்றது விவசாயம்

அந்த விவசாயத்துக்கு உயிர் கொடுப்பது எப்படி?

இந்தியரால்
இந்தியர் மூலதனத்தால்
இந்தியர் உழைப்பால்
உற்பத்தி செய்யப்படும்

ரொட்ரிக்ஸ் - - - - கம்பெனியாரின்

## இயற்கை உபாபஸ் எருக்களை

### உபயோகிப்பதே அதற்கு வழி

கலப்பை மார்க் இயற்கை உரம்

இந்த உரத்தை
உபயோகித்து
உங்கள் மாசூலைப்
பெருக்குங்கள்.

*

எங்கள் உரத்தை
விற்பனை செய்வதற்கு
முக்கியமான இடங்களில்
ஏஜண்டுகள் தேவை:—

விவரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்

**ரொட்ரிக்ஸ் & கம்பெனி,** போன் மில்ஸ், கடம்பூர் S. I. Ry., (திருநெல்வேலி ஜில்லா)

**எ. எஸ். டி. எப். ரொட்ரிக்ஸ்,** காட்பாடி போன் மில்ஸ், காட்பாடி M. S. M. Ry., (வட ஆற்காடு ஜில்லா)

**வாரங்கால் போன் மில்ஸ்,** வாரங்கால் (நிஜாம்)

**வால்டயர் போன் மில்ஸ்,** வால்டயர் (B. N. Ry.,)

இன்னமும் தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கியமான ஊர்களிலும் பிராஞ்சுகள் உண்டு.

Edited, Printed and Published by, P. ALBIN at the "TAMIL MANI" Press. 21, Sembudoss St., G. T. Madras.